சிவமயம்

gistered as a News paperin Ceylon

P. M. G. NO. H. A 59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருஅ] யாழ்ப்பாணம்— பார்த்திப ஹூ பங்குனிமீ உஎஉ (1946 ஏப்பிறில் 9 செவ்வாய்க்கிழமை) [இல நு

## வீர சுதந்திரம் வேண்டிநின்றார் வேறொன்று கொள்வாரோ

### எக்கதி நேரிலும் லட்சியம் விடோம் இந்திய சுதந்திரத்துக்கு உற்ற ஓர்வழி

### வீரம், உறுதி; தியாகம், வெற்றியில் நம்பிக்கை இரத்தம் சிந்தியே விடுதலையடைவோம்

(நேதாஜி, சுபாஷ் சந்திரபோஸ்)

இன்றும் யுத்தம் நடக்கிறது எனவே, இச்சந்தர்ப்பத்தில் பர்மா யுத்தத்தை சம்பந்தமாக நான் ஒரு முடிவான அறிக்கையை விடமுடியாது. ஆனல் ஒன்றைமட்டும், நான் சந்தேக விபரீதமறக் கூறமுடியும். பர்மா அரங்கத்தில் பிரிட்டிஷார் பெற்றுள்ள வெற்றிகளுக்கெல்லாம் அவர்களிடம் உள்ள இந்தியச் சேனையே காரணம் அன்றி வேறெச் சேனையுமல்ல. சென்றவருஷத்து இளவேனிற் காலத்தில் நாம் இந்திய மண்ணில் போர்புரிந்தபோது, பர்மாவுக்குள் நுழைந்து வெற்றிகளை ஈட்டியவர்கள் பிரிட்டிஷ் இந்தியப் படையினரேயாவர். இது மறக்கமுடியாத உண்மை. நாம் எமது தாய்நாட்டின் சுதந்திரத்துக்காகப் போராடினேம்; அப்படிப்பட்ட எங்களது முயற்சி, எம் சொந்தச் சகோதரராலேயே பிரதிகூலப் படுத்தப்பட்டது. இதனை நினைக்கும்போது சொல்லொணுக் கவலையுண்டாகின்றது. இதுவும் விதியின் திருவிளையாட்டுப்போலும். நாம் யாருடைய அடிமைத்தளையை அறுக்கச் சுதந்திரப் போர் தொடுத்தோமோ, அவர்களே எம்மைத் தோற்கடிக்கக் கருவியாயினர்.

#### எமது சிறந்த லட்சியம்

இப்படியான கொடிய, துக்ககரமான அநுபவத்துக்கிடையே, ஆறுதல் தரக்கூடிய ஓர் விஷயமும் இருக்கிறது. எனது இந்திய தேசியப்படை ஜப்பானுடைய கைப்பொம்மையன்றி இந்திய சுதந்தரத்துக்காகப் போர்புரியும் ஸ்தாபனமல்ல என்று தமக்குக்கீழ் உள்ள இந்திய சிப்பாய்களுக்கு பிரிட்டிஷார் போதித்துவந்தனர். ஆனல் நாம் எப்படிப்பட்டவர்கள், கூலிக்கு மாரடிக்கும் கைப்பொம்மைதாஞ, அல்லது பாரத அன்னையின் கண்ணீர் துடைக்கக் கவசம்பூண்டு களத்துக்குப் புறப்பட்ட வீர சிகாமணிகள்தாஞ என்பதைத் தம் கண்ணூரப் பார்த்து அபிப்பிராயம்கொள்வதற்குப் பிரிட்டிஷ் இந்தியச் சிப்பாய்களுக்கு ஓர் சந்தர்ப்பங் கொடுக்கப்பட்டிருக்கிறது. என்னல் ஸ்தாபிக்கப்பட்ட தற்காலிக இந்திய அரசாங்கம் எவ்வாறு வேலை செய்கிறது; நாம் எத்தனை இடையூறுகளைத்தாண்டி எம் கர்மத்தை ஆற்றுகிறோம் என்பதை எம்நாட்டு மக்கள் உணரட்டும்; காலம் போகப்போக நாங்கள் செய்துவந்த வேலையின் பயன், இந்தியச் சிப்பாய்களையும் இந்தியாவின் மக்களையும் பாதிக்காமல் இருக்கமாட்டாது.

#### எதற்கும் அஞ்சேம்

ஆயிரக் கணக்கான எம் வீரச் சகோதரரை இழந்தேம்; லட்சக் கணக்கான ரூபாய் பெறுமதியான பொருள்களைப் பறிகொடுத்தோம். 15 மாத காலமாகச் சொல்லொணுக் கஷ்டங்களை அநுபவித்தேம். ஆனல் எங்கள் பலம் குறையவில்லை. ஈற்றில் நாமே வெற்றியடைவோம் என்ற நம்பிக்கை சிதையவில்லை. சிதையப் போவதுமில்லை "தோல்வி நேருமுன்னர், தோல்வி வந்துவிட்டதே என்று கருதும் சேனையே உண்மையில் அபஜெயமடையும்" என்று முந்திய மகாயுத்தத்தின்போது பிரதம சேனாதிபதியாகவிருந்த வோஷ் பிரபு கூறினர். அது அத்தனையும் உண்மை. இந்திய சுதந்திர அரசாங்க அங்கத்தவராவது சரி, சுதந்திர சேனையின் வீரராவது சரி, இன்றுவரை தோல்வியை ஒப்புக்கொள்ளமாட்டார். எமது லட்சியமோ மிகப் புனிதமானது தெய்வீகமானது; எனவே தோல்வியடையேம்; எமது லட்சியம் மகா புனிதமானது; சத்தியத்தை, தர்மத்தை ஆதாரமாகக் கொண்டுள்ளது என்பதனை நாம் ஒவ்வொருவரும் உணர்வோம்; எனவே, எக்கதி நேர்ந்தபோதிலும் அச்சமின்றி, சுதந்திர தேவி சந்நிதானத்தில் நாம் எதனையும் தியாகம்செய்து ஈற்றில் வெற்றியையடைவோம்; தோல்வியை அறியா வீரர் நாம்,

#### டெல்லிக்குப் போவோம்

கிளோஸ்விற்ஸ் என்ற சேனபதி, 'யுத்தத்தில் எதிர்பாராதசம்பவங்கள் நிகழும்" என்றார். அப்படியான எதிர்பாராத சம்பவம் ஒன்று நடந்துவிட்டது. அதுதான் ஜெர்மன் வீழ்ச்சி. அப்படியே இன்னும் பல எதிர்பாராத சம்பங்கள் நிகழலாம். அவற்றிற் சில எம் சத்துருவுக்குப் பிடிக்காதன. இந்தச் சுதந்திர இந்திய ராஜ்யம், ஆங்கில அமெரிக்கர்களுடன் எங்கும் எப்போதும் போர் தொடுத்துக்கொண்டேயிருக்கும். "டெல்கி சலோ" (டெல்லிக்குப்போவோம்) என்பதே எமது யுத்தகோஷம்; அந்தக் கோஷம் எமது லட்சியம் அடையும்வரை ஒழியமாட்டாது. இதற்கிடையில் அடிக்கடி மாறிக்கொண்டே போகும் உலக நிலைமையை நாம் கூர்ந்து அவதானித்துக்கொண்டு வந்து அதற்கேற்ப எமது கருமங்களைச் சாதிப்போம்.

#### இறுதிவெற்றி நிச்சயம்

இந்தச் சமயத்தில் இந்தியாவிலும் அதற்கு வெளியேயும் வசிக்கும் பாரத மக்களிடம் வேண்டிக்கொள்

தொடர்ச்சி 5ம் பக்கம்

## காங்கேசன்துறை ஆஸ்பத்திரி

### அதனை வாங்குவதில் தாமதம்

முதலில் விலை நிர்ணயித்தல்வேண்டும்

காங்கேசன்துறையில் ராணுவத்தினர்க்குச் சொந்தமாயிருந்த ஆஸ்பத்திரியை அரசாங்கம் வாங்கி நடத்துவதில் மீண்டும் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. மேற்படி ஆஸ்பத்திரிக்கான விலை எவ்வளவு என்று இன்னும் ஓர் முடிவு ஏற்படவில்லை. அப்படியான முடிவு வரும்வரை, அதனை வாங்கவொண்ணுது என்று இதற்கான அரசாங்க நிருவாகசபை தீர்மானித்திருக்கிறது

ராணுவத்தினர்க்குரிய கட்டிடங்களை முதலில் வாங்கி, அதன்பின்னர் விலையை அவர்களுடன் பேசி முடிவுக்கு வருதல் இலங்கையரசாங்கத்தின் முறை. ஆனல், காங்கேசன்துறை ஆஸ்பத்திரி விஷயத்தில் அரசாங்கம் இந்த ஒழுங்கைக் கைவிட்டு முதல் விலை நிர்ணயிக்கப்படல் வேண்டும் எனக் கருதுகிறது. குறித்த ஆஸ்பத்திரி, மற்றும் இராணுவக்கட்டிடங்களைப் போலன்றி இலட்சக் கணக்கில் விலையுள்ளதென்றும், ஆகவே விலையை முதலில் நிர்ணயித்து வாங்குதலே சிறந்ததென்றும் அரசினர் கருதுவதாகத் தெரிகிறது.

## இலவசக் கல்வித் திட்டம்

நல்லதுதான்: ஆனல்.........

பிரதமாசிரியரின் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்] செயின்ற் ஜோன் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்துத் தென்பகுதிக்கூட்டம் ஒன்று சென்ற சனிக்கிழமை கொழும்பிற் கூடியது. அதிற் றலைமை வகித்த ஷை கல்லூரிப் பிரதமாசிரியர் மிஸ்ரர். J. T. அருளானந்தம் தமது குறிப்புரையின்போது, இலவசக் கல்வித்திட்டம் சம்பந்தமாகப் பின்வருமாறு கூறினர்:

"எம்நாட்டுச் சிறார் யார்க்கும் இலவசமாகக் கல்வியளிக்க வேண்டும்; அது அரசாங்கத்தின் கடமை. ஆகவே, அரசினர் செய்துள்ள முயற்சி நல்லதுதான், ஆனல் இப்போது புகுத்தப்பட்டிருக்கும் திட்டமோ ஊனமானது. அதில் ஆட்சேபகரமான பல விஷயங்கள் உண்டு. எல்லாவற்றிலும் பார்க்க, வித்தியாசாலைகளைக் கட்டுப்படுத்திப் பொறுப்பு முழுவதையும் அரசாங்கம் கைப்பற்ற முயற்சி செய்கிறது. எனவே நாம் இவ்விஷயத்தில் மிகவும் சாவதானமாயிருத்தல் வேண்டும்."

## துணிக் கட்டுப்பாடு நீங்காதா?

### முன்னரிலும் பார்க்க நிலைமை மோசமாம் கட்டுப்பாட்டு அதிகாரியின் விளக்கம்

### துணிப் பஞ்சத்துக்கு அரசினரே பொறுப்பு; ஜவுளி வர்த்தகரின் அபிப்பிராயம்

சென்ற வருஷத்திலிருந்து துணிகளின் உற்பத்தி நிலைமை மிகவும் மோசமாகி இருப்பதால் துணிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு, இன்னும் குறைந்தபட்சம் 18 மாத காலத்துக்கு இருந்தே தீரும் என்று துணிக் கட்டுப்பாட்டு உதவியதிகாரி, கொழும்பு "ரைம்ஸ்" பத்திரிகை நிருபர் ஒருவர்க்குக் கூறியுள்ளார்.

1945-ம் ஆண்டிலும் பார்க்க, இப்போது துணி உற்பத்தி நிலை மிகவும் மோசமாகிவிட்டது.

உற்பத்தி செய்யும் நாடுகளிலிருந்து இலங்கைக்குத் தேவையான துணிகளைப்பெறுதலில் அநேக இடையூறுகள் ஏற்பட்டிருக்கின்றன.

இலங்கைக்கென்று நிர்ணயிக்கப்பட்ட பருத்தித் துணிகளின் தொகையில் அரைவாசியைத்தான் பெறமுடிகிறது. இவையே துணி விஷயமாக இப்போதுள்ள நிலை.

துணிக் கட்டுப்பாட்டுப் பகுதியாரின் அபிப்பிராயம் இவ்வாருக, துணி வர்த்தகரின் அபிப்பிராயம் இதற்கு நேர்மாருக இருக்கின்றது. கட்டுப்பாடுகளை நீக்கி, துணிகளை இறக்குமதி செய்தற்குத் தமக்குச் சுவாதீனங் கொடுத்தால், தம்மால் இலங்கைக்கு வேண்டிய துணிகளைத் தருவிக்கமுடியுமென்பதே வர்த்தகரது அபிப்பிராயமாகும், இன்னும், துணிக் கட்டுப்பாட்டதிகாரியின் அளவுகரு மிஞ்சிய கட்டுப்பாடுகளே துணிப் பஞ்சத்துக்குக் காரணம் என்றும், இப்படியான துணிப் பஞ்சகாலத்தில் அரசாங்கக் கிட்டங்கிகளில் இருந்து துணிகள் களவாடிக் கள்ள விலைக்கு விற்கப்படுகின்றன என்றும் ஓர் வியாபாரி குறிப்பிட்டார், சென்ற வாரம் ஓர் அரசாங்கக் கிட்டங்கியில் ஏறக்குறைய 50000 ரூபா பெறுமதியான துணிகள் களவாடப்பட்டமை ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

#### இலங்கைக்கு அவுஸ்திரேலிய அரிசி

இங்கிலாந்துக்கு அனுப்ப வென்று வைத்திருந்த 20000 தொன் அரிசியை இலங்கைக்கும் இந்தியாவுக்கும் அனுப்ப அவுஸ்திரேலிய அரசினர் சம்மதித்து விட்டதாக ஒரு செய்தி கூறுகிறது.

#### மருந்தென நினைத்துத் திராவகத்தைக் கொடுத்தாள்

கொஸ்ஞவையைச் சேர்ந்த பேபி நோனு என்னும் பெண் மருந்தென்று நினைத்து, ஓர் போத்தலில் இருந்த நெருப்புத் திராவகத்தைச் சுகவீனமுற்றிருந்த தன் குழந்தைக்குக் கொடுத்தாள். அச்சிசு மரணமடைந்தது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், பார்த்திபஞூ
பங்குனிமீ ௨௭௨ செவ்வாய்க்கிழமை

## வருஷ பலன்கள்

இப்பொழுது நிகழ்வதாகிய பார்த்திப வருஷம் முடிவதற்கும் அடுத்த விய்ய வருஷந் தொடங்குவதற்கும் இன்னும் இடையில் மூன்று தினங்கள் மாத்திரம் உள்ளன; வருடாந்தத்திலே குறித்த வருஷத்தின் பலனைத் தொகுத்துச் சொல்வது பத்திரிகைகளின் இயல்பாகும்; ஆனல் சென்ற ஐந்தாறு வருடங்களின் பலனையிட்டுத் தொகுத்துச் சொல்லவேண்டிய நேரங்களிலெல்லாம், நீடித்து நடந்த யுத்தங் காரணமாக மக்களுக்கு நன்மையான பலன் சொல்ல இயலாமலிருந்தது; இந்தப் பார்த்திப வருடத்திலேயே நீடித்த யுத்தம் ஒருவாறு முடிவெய்தியமையினல், உலக சமாதானமும் உணவுப் பொருட் பஞ்சமும், உடைப்பஞ்ச மென்னும் இவைகளின்நீக்கமும் நிகழுமெனமக்களனைவரும் எதிர்பார்த்தவண்ணமிருந்தார்கள்; ஆயினும், நாமொன்று நினைக்கத் தெய்வம் பிறிதொன்றை நினைத்தவாறு, மக்கள் காத்திருந்த நன்மைக்கும் ஆறுதலுக்கும் நேர்மாருகக் கருமங்கள் இந்த வருஷத்திலே நேரலாயினவெனலாகும்; தொகுத்துச் சொல்லுகில் யுத்தத்தோடுகூடிய ஆண்டுகளில் விளைந்த கெடுதிகளைக் காட்டிலும் பஞ்சங்களைக் காட்டிலும் மோசமான கெடுதிகளும் பஞ்சங்களும் யுத்தம் முடிந்ததாகிய இந்தப் பார்த்திப வருடத்திலே நேரலாயின; நாம் முன்னர் ஒரு சந்தர்ப்பத்தில் எடுத்துக் காட்டியவாறு, தோல்வியுற்ற அரசினர் சாம்பராகிய நிலைமையையும், வெற்றிபெற்ற அரசினர் கரியாகிய நிலைமையையும் யுத்த இறுதியில் அடையலாயினர்; வெற்றி தோல்விகளை யடைந்த நாடுகளும் முறையே மேலே சொல்லப்பட்ட நிலைமையை யடைந்தனவெனக் கூறலாம்; பரிபாலனப் பொறுப்பும் அதனல் விளையக்கூடிய சிரமங்களும் வென்ற சாதியினர்க்கு அதிகமாக, தோல்வியுற்ற சாதியார்க்கு இல்லையாயின வெனச் சொல்லல் மிகையாகாது.

யுத்தம் முற்றெய்தியும் பூரண சமாதானம் வராமலிருத்தற்கும் பஞ்சம் நீங்குதற்கு மாருக அதிகப்படுதற்குங் காரணம் யுத்தம் நிகழ்ந்த காலத்திலும் முடிந்த பின்னரும் பழைய யுத்த தர்மங் கைக்கொள்ளப்படாமையும், ஐக்கியப்பட்டசாதியினர் எப்பகுதியினராக, அகத்தே பகைமையும் புறத்தே ஐக்கியமும் கொண்டொழுகியமையுமாகுமென அறிஞர்கள் எண்ணுகிறார்கள்; இதனல், பிறந்தும் பிறவாதவர், செத்துஞ் சாகாதவர், படித்தும் படியாதவர் என்றவாறு, இந்த யுத்தம் முடிந்தும் முடியாமலும், கிடைத்த வெற்றியும் பெற்றும் பெருமலுமிருக்கின்றன; இந்த வருடம் முடிவதற்கு முந்தியே உலகத்தின் மூன்றும் யுத்தம் நிகழுமோ என்ற சந்தேகம் மக்களிடத்திற் பிறந்து விட்டமையினல் இந்த வருட நிகழ்ச்சிகளில் ஏதும் நல்லன வுண்டெனச் சொல்லுதல் எப்படி முடியும்?

எங்ஙனமாயினும், எங்கள் பிருத்தானியர் யுத்த காலத்திலே பகைவரிடம் பறிகொடுத்த சில நாடுகளை மீட்டுப் பிடித்ததும், சில வருடங்களாக எங்களைப் பிரிந்திருந்த எங்கள் தமர்களாகிய சிங்கப்பூர், மலாய்நாடு, பர்மா முதலாம் தூரித்த நாடுகளில் வசித்த யாழ்ப்பாண மக்கள் யப்பானியருடைய ஆளுகையிலிருந்து தப்பித் தொன்மைபோல் எங்களுடன் தொடர்புற்று ஊடாடத்தொடங்கியதும், எங்கள் அயல்நாடாகிய இந்தியா சுவதந்திரம் பெறுதற்கு அண்மையான நிலைமையி லிருப்பதும் இந்தப் பார்த்திப வருடத்திலேயாம்; இதன்பொருட்டு எல்லாம் வல்ல இறைவனை நாம் வழுத்தல் வேண்டும்.

. இனிப் பிறக்கப்போகின்றதாகிய விய்ய வருஷத்தின் பலாபலன்களை நாம் பஞ்சாங்க மூலமாக ஒருவாறு அறிதலே இயலுமன்றி, இப்போது தீர்க்கமாகச் சொல்லுதல் முடியாது; இவ்வருடத்தின் பலன் பின்வருமாறு தொகுத்துச் சொல்லப் பட்டுள்ளது:-

வியவருஷ மாரி விளைவுண்டாஞ்
சீனம்
சுகவாழ் வுடனே சுகமாம் —
உயர்வாம்
பதினெட்டு வித்தும் பதிவாய்ப்
பலிக்கும்
கதிர்பெறுநல் லக்ஷமிகுங் காண்

வருகிறவியயவருடத்திலேமாரி மழை நன்கு பெய்து காலவிழைவுண்டாகும்; சீன தேசத்தார் அந்நியரின் ஆட்சியி லிருந்து விடுதலை பெறுவர்; பலவகைப் பட்ட தானியங்களும் பலிதமாகும்; அகமலிவும் க்ஷேமமுமுண்டாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

வருஷ பலனுக, மாசபலனுக, எங்கள் வாழ்நாளின் பலனுக எப்பலனும் இறைவனுடைய திருவருளையே பொறுத்து நிகழ்வன; ஆதலின் நாம் எல்லாம் வல்ல இறைவனிடத்து இறுகிய பத்திபூண்டு அந்த இறைவனுக்குத் தொண்டாற்றிச் சற்கருமங்களைச் செய்து நீதிமுறையில் வாழ்வோமே யாயின், எமக்கு வருங்குறை யாதுமில்லையாம்; வருடப்பிறப்புத் தினத்தன்று வழக்கம்போல் தெய்வ வழிபாடு முதலியன செய்து புதியவருட வாழ்க்கையைத் தூயமுறையிலே தொடங்குதல் வேண்டும்; வருட ஆரம்பத்திற் சூரிய பொங்கல் செய்வோர் அடுத்த நாளாகிய ஞாயிற்றுக்கிழமை காலை செய்வது உத்தமமென அறிஞர் சொல்லுகிருர்கள்.

# இந்திய அரசியல்

### "இந்தியாவைத் துண்டாட முடியாது"

முஸ்லிம்லீக் தலைவர் மிஸ்ரர் ஜின்ஞு தனது பாகிஸ்தான் கொள்கைக்குச் சீக்கியரின் ஆதரவைத் தேடுவதற்காக, சீக்கியர் விரும்பினல் தமக்கும் ஓர் பிரதேசத்தை வகுத்துக் கொள்ளலாம் என்று கூறிய செய்தி ஏற்கெனவே வெளிவந்துள்ளது. அப்படியாகப் பாரத கண்டத்தைத் துண்டாட முடியாது. இந்தியா ஒன்ருயே இருக்கவேண்டும். துண்டாடுவதைச் சீக்கியர் தம்தேகத்தில் ஓர் சொட்டு இரத்தம் இருக்கும் வரை எதிர்ப்பர் என்று சீக்கியத் தலைவர் தாராசிங், மிஸ்றர் ஜின்ஞுவுக்கு அறிவித்துள்ளார்.

●

### ஹூவலர் விஜயம்

அமெரிக்காவின் முந்திய பிரஜாதிபதியா யிருந்தவரும், இப்போது உலக உணவுப் பஞ்ச நிவாரண சபையின் தலைவராயுள்ளாருமான மிஸ்றர் ஹேர்பர்ட் ஹூவலர், இந்திய இராஜப் பிரதிநிதியின் அழைப்பின் பேரில் இந்தியாவுக்கு விஜயம் செய்து உணவு நிலையை நேரே பார்ப்பர்.

●

### மந்திரிகள் தூதுக்கோஷ்டி

காங்கிரஸ் அதிகாரம் வகிக்கும் மாகாணங்களின் பிரதம மந்திரிகளில் ஐவர், மந்திரிகள் தூதுக்கோஷ்டியுடன் சென்ற வெள்ளிக்கிழமை இந்திய அரசியல் விஷயமாகச் சம்பாஷித்தனர். ஐக்கிய மாகாணப் பிரதமமந்திரி பண்டிதகோவிந்தவல்லபபந்த், இந்திபக்கோஷ்டிக்குத் தலைவராயிருந்து சம்பாஷணைகள் நடத்தினர். இந்தியாவின் சுதந்திரம், பாகிஸ்தான், பாதுகாப்பு என்னும் பிரச்னைகளைப்பற்றி 2¼ மணித்தியாலம் பேச்சு நடந்ததாகத் தெரிகிறது. சிம்லா மகாநாட்டில் நடந்தது போலத்தான் இதுவும் நடக்குமோ என்று ஓர் பத்திரிகை நிருபர் கேட்டதற்கு, "இல்லை, சிம்லா மகாநாடு நிகழ்ந்த நிலைவேறு. இப்போது ஏற்பட்டுள்ள நிலைமைவேறு" என்று பண்டிதபந்த் பதிலிறுத்தனர். நிலைமை திருப்திகரமாயிருக்கிறது என்று அரசியல் வட்டாரங்களிற் கருதப்படுகிறது.

●

### நிருவாகசபையை மாற்றியமைக்க:

மகாஅரசியல் நிபுணரான சேர். தேஜ் பகதூர் சாப்ரூ, மந்திரிகள் கோஷ்டியிடம் தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்துவிட்டார். முதலில், இராசப் பிரதிநிதியின் நிருவாகசபையைக்கலைத்து, அதனிடத்துப் பொது ஜனங்களின் ஆதரவைப் பெற்றவர்களைக் கொண்ட ஓர் நிருவாகசபை நிறுவப்படல் வேண்டும் என்றும்; இந்தியாவை 'ஸ்தான்'களாகப் பிரிக்காதபடி அகில இந்தியாவுக்கும் சுதந்திரம் கொடுத்தல் வேண்டும் என்றும் மந்திரிகள் கோஷ்டிக்கு அவர் கூறினர்.

●

### காங்கிரஸ் அதிகாரசபை:

காங்கிரஸ் தலைவர் அபுல்கலாம் ஆஸாத் மந்திரிகள் கோஷ்டியைச் சந்தித்து காங்கிரஸின் நிலையை விளக்கினர். அவர் வருகிற 12-ம் திகதி காங்கிரஸ் அதிகாரசபையைக் கூட்டி இனி நடக்க வேண்டியவற்றைப் பற்றியோசிப்பார்.

## ராமகிருஷ்ண ஜயந்திவிழா

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் ஜயந்தி விழா, சென்ற சனிக்கிழமை வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில், பம்பாய் ராமக்கிருஷ்ண மடத்துத் தலைவராயுள்ள ஸ்ரீமத் சம்பத்தானந்தா அவர்களின் தலைமையில் மிகவும் விமரிசையாக நடைபெற்றது.

தமது தலைமைப் பிரசாரணத்தில் ஸ்ரீமத் சம்பத்தானந்தா அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்.

"மேனுடெங்கும் சென்று சிங்கநாதம் செய்து எமது கலாசாரத்தை எமது சமயத்தை அங்கே பரப்பி, ஆத்மீக வெற்றி ஸ்தாபித்துத் திரும்பியபோது சுவாமி விவேகானந்தருக்கு வரவேற்பளித்த உங்கள் மத்தியில்நிற்க எனக்கும் பேருவகையளிக்கிறது. நான் இந்தியா என்று கூறும்போது பாரதநாட்டையும்ஈழத்தையும் சேர்த்துக் குறிப்பிடுகிறேனே யன்றிப் பிரித்து அல்ல இந்தியாவும் ஈழமும் ஒன்று; அவற்றைப் பிரிக்கமுடியாது!

இந்தியா விஷயமாகச் சுவாமி அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்.

"இந்தியா ஓர் தனிப்பட்ட சிறப்பு வாய்ந்த தேசம்: வேதம் பிறந்தநாடு: மாதவர் வாழ்ந்து சீரிய வாழ்க்கை நடாத்தி மக்களுக்கு நேரிய வழிகாட்டிய தேசம்; இன்று அமெரிக்கஜனுதிபதியான மிஸ்ரர் ட்ரூமன் சமாதானம் சமாதானம் என்று பரக்கப் பேசுகிருர். ஆனல் பாரதநாட்டின் உதவியின்றி உலகில் சமாதானத்தை நிலைநாட்ட முடியாது. உலகப் பிரச்னைகளைத் தீர்க்கக் கூடியது இந்தியாவே. தான் முன்னேற வேண்டுமானல், இனி மேனுடு, கிழுட்டைச் சார்ந்து அதன் உதவியைப் பெறவேண்டும்."

இலங்கையிலே, கல்வி விஷயமாகக் குறிப்பிட்டன வருமாறு:

"நீங்கள் உங்களுடைய நாட்டிலே உங்களுக்காக ஓர்சர்வகலாசங்கத்தை நிறுவனீர்கள்; ஆனல் அதற்கு அத்தியட்சகரும் உப அத்தியட்சகருமாக [illegible] செய்தீர்கள்? உங்கள் பிள்ளைகளுக்கு உங்கள் நாட்டுச் சரித்திரத்தைக் கற்பியுங்கள், 'உன் அப்பாவின் பெயர் என்ன' என்று ஓர் பிள்ளையைக் கேட்டால், அவனுக்கு மறுமொழிசொல்லத்தெரியாது. ஆனல் இங்கிலாந்து மன்னனின் மூதாதையர் பெயரை அவன் அடுக்கிக்கொண்டே சொல்லுவான். அப்படியான ஓர் கேடுகெட்ட கல்வி முறையை இங்கே தாபித்திருக்கிறீர்கள். அந்நிய வேந்தரின் பரம்பரைகளைப் படிக்க வேண்டாம். பாரதம், இராமாயணம், பாகவதம் என்பவற்றைப்படிக்க உங்கள் பிள்ளைகளைத் தூண்டுங்கள்".

ஸ்ரீ இராமக்கிருஷ்ணரின் வாழ்க்கையைப்பற்றி வித்துவான் K. கார்த்திகேசு அவர்கள் ஓர் பிரசாரணம் நிகழ்த்தினர்.

தலைமையாசிரியர் ஸ்ரீ S. அம்பிகைபாகன் அவர்களின் நன்றியுரையுடன் விழா முற்றுப்பெற்றது

### யாழ்ப்பாணம் சிறைச்சாலை
### சைவமறியற்காறர் வருடப்பிறப்பு விழா

வருகிற விய்ய வருஷப்பிறப்பிலன்று யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் வழக்கம்போற் சைவமறியற்காறர் விசேஷ கடவுளாராதனை செய்யவும் அவர்களுக்குச் சைவப்பிரசங்கஞ் செய்யவும் சிற்றுண்டி வழங்கவும் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார் ஒழுங்குகள் செய்துள்ளனரென அச் சபைக் காரியதரிசி தெரிவிக்கின்ருர்.


## தீவுப்பகுதித் தேர்தல்

புதிய அரசியலில் அமைக்கப்படும் அரசாங்கசபையில், தீவுப்பகுதிப் பிரதிநிதியாய் வர நான் முற்பட்டிருக்கிறேன்.

ஆங்கில இந்துசாதன ஆசிரியராக எந்தக் கொள்கையை அநுசரித்தேனே, அதுவே இனியும் எனது அரசியற்கொள்கையாகும்.

A. V. குலசிங்கம்

Mis 11 9—30 4


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடிதம்

# வேலணைச் சைவப்பிரகாச வித்தியாசாலை

ஐயா,

வண்மேற்கு ஸ்ரீ அ. கனகசபாபதி அவர்கள் வேலணைச் சைவப்பிரகாச வித்தியாசாலை விஷயமாக 22-2-46ல் வெளிவந்த தங்கள் பத்திரிகையில் ஓர் கட்டுரை எழுதி வெளியிட்டிருந்தார். அதற்குப் பதிலாக 5-3-46ல் திரு. அ. வைரமுத்து என்பவர் வேலணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையும், மடாலயமும் என்னும் மகுட நாமத்துடன் ஓர் கடிதம் எழுதியிருந்தார். அந்தக் கடிதத்தில் அவர் மேற்படி வித்தியாலய, மடாலய ஸ்தாபகரும், சைவப் பிரசாரகரும், சைவசித்தாந்த சாகரமும், தீவுப் பகுதியிலுள்ள சைவசமயிகள் எவரையும் இயன்றவரையில் கல்விமான்களாக்கி, சைவத்தையும் தமிழ்மொழியையும் வளர்க்க காரணம்பற்றி பெரிய உபாத்தியாயர் என்று எவர்களாலும் விசேஷமாக அழைக்கப்பட்ட அடியேனின் பேரனாரும், குரு முதல்வருமாகிய ஸ்ரீமத் வி. கந்தப்பிள்ளை அவர்களைச் சாமானியமான ஒருவரைச் சொல்வதுபோல் வேலணை கந்தப்பிள்ளை என்பவர் சைவ மக்களின் உதவியுடன் வேலணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையையும் அதனயலிலே ஓர் மடாலயத்தையும் ஸ்தாபித்து நடத்தினார் என்று பொட்டையாக எழுதியிருந்தார். இந்தத் திரு. அ. வைரமுத்து இவ்வித்தியாசாலையிலேயே அப் பிள்ளை அவர்களிடமேயோ அல்லது அவர்களின் மாணாக்கர்களாய் அக்காலம் கல்வி கற்பித்த மற்றை ஆசிரியர்களிடமேயோ வித்தியாரம்பஞ் செய்யப்பெற்று அரிச்சுவடி முதல் எட்டாம் தரம்வரையிலும் பயின்று பின்னர் ஆசிரிய தராதரப்பத்திரம் பெற்று, அவ் வித்தியாசாலையிலேயே உபாத்தியாயராய் இன்றும் இருந்து சேவித்துச் சீவிக்கின்றார். தான் இந்த நிலைக்கு வருவதற்குக் காரணம் எந்த மூலம் என்பதையாவது ஒருசிறிதும் யோசியாது பயபக்தியின்றி, பிள்ளையவர்களை ஒருசிறிதும் மரியாதையின்றி எழுதினர். எழுத்தறிவித்தவன் இறைவனாகும் என்னும் வாக்கியத்தையாவது இவர் நுணுகிக்கற்றிலர்போலும்.

இது இவ்வளவிலிருப்ப, இனி வித்தியாலய மடாலயத்தைப்பற்றி விபரித்தெழுதியவரைப்பற்றிச் சிறிது ஆராய்வாம். மடாலயம் கட்டப்பட்ட புதிதில் சில குருபூசைகள் நடந்தனவாக் கேள்வி. அவைகளும் ஸ்தாபகர் காலத்திலேயே நின்றுவிட்டனவெனப் பெரும் பொய்வசனம் எழுதினர். குருபூசைகள் ஸ்தாபகர் காலத்திலேயன்றி அவர்கள் மகன் ஸ்ரீமத் வி. க. அம்பலவாணபிள்ளையவர்கள் காலத்தும் என்னுடைய வித்தியாலய மடாலயங்கள் பரிபாலிக்கப்பட்ட காலத்தும் குருபூசைகள் விதிப்படி நடத்தப்பட்டன. குருபூசைகள் செய்த தொண்டர்கள் இன்றும் சீவந்தர்களாயிருக்கின்றார்கள். சமய குரவர்கள் பூசைகளில் ஒன்றை, இந்த திரு. அ. வைரமுத்துவே எனது காலத்தில் இந்த மடாலயத்தில் நல்ல விமரிசையாக அதிகப் பொருள் செலவு செய்து செய்வித்தார். மடாலயம் கட்டுவித்ததற்கு ஏறக்குறைய முப்பது வருஷங்களுக்குமுன் ஸ்தாபிக்கப்பட்ட வித்தியாசாலை நன்னிலையிலிருப்ப, மடாலயம் பாழாய் வீழ்ந்துகொண்டிருக்கிறது. விஷப்பாம்பு, வௌவால் முதலியவற்றிற்கு உறைவிடம், பொழுது மறைந்தபின் ஆவியின் நடமாடுவது பயம், சிறுவர்கள் பயிலுவதற்கு அடாதவிடம் என்பது முதலாய இன்னோரன்ன பொய் வசனங்களை நிரப்பியதாய் எழுதினர். வித்தியாசாலையில் கீழ்ப்பிரிவுப் பிள்ளைகளை மடாலயத்தின் விறாந்தையில் இந்த திரு. வைரமுத்துவே வைத்துப் படிப்பித்தாரா இல்லையா என்பதைத் தன மனச்சாட்சியுடன் சொல்லுவாரா. இவர் மறுத்தாலும் இவருடன் கூடப் படிப்பிக்கும் மற்றைய உபாத்தியாயர்களுக்கு இவர் சொல்லிய பொய் விளங்கும். அதுவேயுமன்றி அரசினர் பிள்ளைகளுக்குப் போசனம் கொடுக்கத்தொடங்கியபின் ஏறக்குறைய 200 பிள்ளைகளுக்குச் சமையல் செய்து சாப்பாடு வைத்துக் கொடுத்தது இந்த மடாலயத்திலேயே. இதை நடத்துவிக்கவரும் இந்தத் திரு. வைரமுத்துவே. மடாலயத்தின் வடக்கறை சமையலுக்குரியது. நடு அறை பளிங்கு இடாப்புகள், படங்கள், மணிக்கூடு முதலியன வைத்துப் பாவிப்பது. தெற்கு அறை பிள்ளைகளின் புஸ்தகங்கள் சிலேற்று முதலியன வைத்து எடுக்கும் பாவிப்புக்கு உரியன. இவ்வறைகளில் சாமான்கள் வைத்துப் பூட்டித் திறந்து பாவித்தவரும் இந்தத் திரு. வைரமுத்துவே; சிலசமயம் குடியில்லாத இடத்தில் பாம்பு வந்து இருக்கவுங்கூடும், அவ்வாறிருந்தால் அதை வராது தடுப்பதைவிட்டு மடாலயத்தை அடியோடு இடித்து அழிப்பதா? எங்கள் வேலணை மேற்கிலுள்ளவர்களனைவர்க்கும், காணவாய் வாணிபரதீனத்தவர்களே பரம்பரையான குருமார்கள். அவர்கள் குருமார்த்தமாக வேலணைக்கு வருங் காலங்களில் வசித்தற்கு குருக்கள்மடம் என ஓர் வீடுதி இங்கே இருக்கிறது. இதில ஓர் சைவக் குடியும் இருந்தது. இற்றைக்கு நாலு ஐந்து வருடங்களுக்குமுன்பு அந்தக் குருக்கள் மடத்தின் முகப்பில் அதாவது குருக்கள் சயனிக்கும் கட்டிலுக்கு முன்னால் ஒரு பாம்புப் புற்று இருந்தது. அதைப் பாம்புப் புற்றெனக் கவனித்திலர். சிலவேளைகளில் புழுதியில் பாம்பு ஊர்ந்த அடையாளங்கள் காணப்பட்டமையால் அதில் குடியிருந்த சைவரின் மகன் புற்றை வெட்டிச் சோதித்தபொழுது அதில் நாலு, ஐந்து நச்சுப் பாம்புகளும் முட்டைகளும் வெளிப்பட்டன. உடனே பாம்புகளை அடித்துக் கொன்றுபோட்டார்கள். இது அயலிலுள்ள அனைவர்க்கும் தெரியும். பாம்பு நடந்தமையால் குருக்கள் மடத்தை இடித்து அழிக்கவில்லை. தற்பொழுது மடத்தில் வந்து தங்குபவர் இவரால் காட்டப்பட்ட ஸ்ரீமத் கைலாசநாத தேசிகர் அவர்கள். தமது வாசஸ்தானமாகிய குருக்கள் மடத்தில் பாம்பு வந்து குடிகொண்டபொழுது அதனையகற்றத் திருத்துவித்த தேசிகரவர்கள் எமது வித்தியாசாலைப் பக்கத்திலிருந்த மடத்தில் பாம்பு வந்ததற்காக அடியோடு இடித்தழிக்கச் சம்மதங் கொடுத்திரார்.

பாதவர் மடங்களாதி
  வாதனம் திருக்குளாதி
நாதமாப் லிங்கமாதி
  நளினபுட் காணியாதி
சேதமுற் றிடின்முன் போலச்
  செய்தவோர்க் குறுபயன்முன்
ஓதுமுன் செய்தமேலாரில்
  ஆயிரங் குணித மோங்கும்,

என உண்மை நூல்கள் கூறுகின்றன.

ஞான நூல்களைப் படித்தற்கும் படிப்பித்தற்கும் உரிய இடமே மடம் என்றும், உரியவர்களைப் பெறும்பொழுது அதற்கு இது இடமாகும் என்றும், இறந்துயிர்த்தது எனவும் குறிப்பிட்டார். இந்த மடாலயத்தை ஸ்தாபித்த பிள்ளையவர்கள் பெரும் [illegible] கமாசவும், வித்தியாசாலை உபாத்தியாயர்களுக்குத் தேவைப்பட்டால் குடியிருக்கவும் அறிவல், வயதால் முதிர்ந்த பெரும் பிள்ளைகளுக்கு உயர்தரக் கல்வி கற்பிக்கவும், குருபூசை மகேசுர பூசை முதலியன செய்தல் முதலிய நோக்கங்களோடே அமைத்ததன்றி அடியோடு இடித்தழித்துத் தமது நோக்கத்திற்கு மாறான விஷயங்களுக்குப் பாவிப்பதற்கன்று. இதைச் சாதனமூலமும் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.

மடாலயத்தில் கிறீஸ்தவர்கள் குடியிருந்தார்களென்று ஒரு குற்றம் பாரித்தார். அது அந்தக் காலத்தில் தராதரப்பத்திரம் பெற்ற உபாத்தியாயர் கிடையாமையால் ஒருபோலிக் கிறீஸ்தவர் உபாத்தியாயராகவிருந்தபொழுது வித்தியாசாலை வளவுக்குள் புறம்பாக ஒரு சிறு கொட்டகை போட்டு அதில சமையல் சாப்பாடு வைத்துக் கொண்டிருந்ததேயன்றி, மடத்தறைகளில் குடியிருக்கவில்லை.

தொடர்ச்சி 1-ம் பக்கம்

# மணிவாசகப்பெருமான்

(திருமயிலை, சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள்)

மாணிக்கவாசகப் பெருமான் சைவசமயாசாரியருள் ஒருவராயிருந்தும் அவருடைய சரித்திரம் பெரியபுராணத்திலேனும் பதினொராந் திருமுறைப் பிரபந்தங்களிலேனுங் கூறப்படாமைக்குக் காரணம் இன்னதென்று விளங்கவில்லை. பலர் பலவாறு அவரவர்களின் புத்திக்கேற்றபடி கற்பித்துக் காரணங் காட்டுகின்றனர். அவை எல்லாங் கொள்ளத்தக்கனவாகக் காணப்படவில்லை. திருத்தொண்டத்தொகையில் மாணிக்கவாசகர் பெயர் கூறப்படாமையால் அதன் விரிநூலாகிய பெரியபுராணத்தில் அவர் சரிதம் இடம்பெறவில்லையென்று கூறலாம். முழுச் சரித்திரம் கூறப்படாவிட்டாலும் அவரைப்பற்றிய குறிப்பு எங்கேனும் ஒரு பாடலிலேனும் கூறப்பட்டிருக்கலாமே. திருமுறைகளை வகுத்த நம்பியாண்டார் நம்பிகள் தமது கோயிற்றிருப்பண்ணியர் விருத்தத்தில்,

வருவா சகத்தினின் முற்றுணர்ந்
  தோனைவண் டில்லை மன்னைத்
திருவாத வூர்ச்சிவ பாத்தியன்
  செய்திருச் சிற்றம்பலப்
பொருளார் தருதிருக் கோவைகண்
  டேயுமற் றப்பொருளைத்
தெருளாத வுள்ளத் தவர்கவி பாடிச்
  சிரிப்பிப்பரே.

என்று திருச்சிற்றம்பலக் கோவையாரைப் பாராட்டியுள்ளார். பட்டினத்துப் பிள்ளையாரும் திருவிடைமருதூர் மும்மணிக் கோவையில் 'திருந்திய வன்பிற் பொருந்துமைப் பிள்ளையும்' என்று குறிப்பித்துச் செல்லுகின்றார். இவ்விரண்டு நூல்களும் பதினொராந் திருமுறையிற் சேர்ந்தவை. இவற்றைச் சேக்கிழார் பாராமலிரார். இருந்தும் அவரைப்பற்றி எங்கேனும் தமது புராணத்தில் கூறாதுவிட்டது ஆச்சரியத்தைத் தரத்தக்கதாயுள்ளது. தொண்டைநாட்டின் சிறப்பைக் கூறுமிடத்துக் கந்தபுராண ஆசிரியர்,

உகிருசின் றசிற் றண்டிகொண்
  டொலிபுனற் சடைமேல்
மதுரை நாயகன் மண்சுமந்
  திட்டமா நகரின்
முதிரு முத்தமிழ் விரகன
  தேடென மொய்ம்மீன்
எதிர் பருந்திடப் போவது
  பாலியா மியாறு.

என்று மாணிக்கவாசகருக்காகப் பிட்டுக்கு மண் சுமந்த திருவிளையாடலைப் பாராட்டுகின்றார். இவ்விதமேனும் சேக்கிழார் எங்குங் கூறினாரல்லர். பூந்துருத்தி காடநம்பி தமது திருவிசைப்பாவில் ஞானசம்பந்தர், கண்ணப்பர், தில்லைமூவாயிரவர், திருநாவுக்கரசர், சம்பந்தர், சோமாசன் பெருமான், சுந்தரர் முதலியவர்களுக்குச் திருச்சிற்றம்பலவாணர் அருள்புரிந்ததைக் கூறுகின்றார். நமது சுவாமிகளைப்பற்றி யாண்டுங் கூறிற்றிலர். இவையெல்லாம் ஆச்சரியத்தக்கவை. சுவாமிகள் குரு உபதேசம் பெற்ற திருப்பெருந்துறையும் உத்தரகோச மங்கையும் பிரபல சிவதலங்களாயிருந்தும் அவற்றைத் தேவாரகாரரேனும் பாடாதுவிட்டதும் கவனிக்கத்தக்கது. மதுரைத் தேவாரப் பதிகங்களுள் பிட்டுக்கு மண் சுமந்த திருவிளையாடல் முதலியன குறிப்பிடப்படாமையும் நோக்கற்பாலது.

“சடைமுழுங் தீசனை வாசகனைக் கொண்டார்”, “நரியைக் குதிரைசெய்வானும், நாகரைத் தேவுசெய்வானும்”, “மணியார் வைகைத் திருக்கோட்டில் நின்றதோர் திறமுங் கோன்றும்” என்னும் தேவார அடிகள் நமது மணிவாசகரைக் குறிப்பன என்று சிலர் கூறுவர். மற்றுஞ் சிலர் அவை வேறு சரிதங்களைக் குறிப்பவை என்பர். திட்டமாய் ஓர் முடிவுக்கு வரக்கூடவில்லை. ஆனால் அப்பர் சுந்தரர் தேவாரச் சொற்றொடர்களுக்கும் திருவாசகத்திலுள்ள சில சொற்றொடர்களுக்கும் இயைபு எடுத்துக்காட்டலாம். இதனால் தேவாரத்தைப் பார்த்துத் திருவாசகம் பாடப்பட்டதென்றோ, திருவாசகத்தைப் பார்த்துத் தேவாரம் பாடப்பட்டதென்றோ கூறமுடியாது. எல்லாம் சிவனருளின், அருட்புலமையாளர்களுக்கு கருத்தொற்றுமை தானாகவே உண்டாகலாம், ஒருவரைப் பார்த்து மற்றவர் பாடினரென்பது அபசாரமாகும்.

திருவாசகத்தில் பல சரிதங்கள் வருகின்றன, அவை விபரமாகத் தெரியவில்லை.

1. கல்லாடத்துக் கலந்தினிதருளி நல்லாளோடு நயப்புறவெய்தியது.
2. பஞ்சப்பள்ளியிற் பான்மொழி தன்னொடு எஞ்சாதீண்டு மின்னருள் விளைத்தது
3 சந்தம்பாடியில் நான்மறையோனாய் அந்தமிலாரியனாய் அமர்ந்தருளியது
4. வேலம்புத்தூர் விட்டேறருளிக் கோலம் பொலிவு காட்டியது
5. தர்ப்பணமதனிற் சாந்தம்புத்தூர் விற்பொரு வேடற் கீந்தது.
6 பூவலமதனிற் பொலிந்தினிதருளிப் பாவகநாசமாக்கியது.
7. பாண்டூர் தன்னிலீண்ட இருந்தது.
8. தேவூர்த் தென்பால் திகழ்தருதீவிற் கோவார் கோலங் கொண்டது.

முதலிய சரித்திரங்கள் பலப்படில்லை, கல்லாடம், பஞ்சப்பள்ளி, சந்தம்பாடி, வேலம்புத்தூர் முதலிய தலங்கள் எங்குள என்பதுதானும் தெரியவில்லை. திருவாசக உரைக்குறிப்பு எழுதியவர்கள் இவற்றைப்பற்றிச் சிறிதும் விசாரித்தாரல்லர், ஓர் சிவதலம் என்று கூறிவிட்டு அப்பாற் செல்லுகின்றனர் அவரவருரைகளில். எமது தமிழ் வேதமாகிய திருவாசகத்தைச் செவ்வையாக ஆராய வேண்டாமா? இதனையாராய்ச்சி உண்மையான தென்றபாலது. இதைவிடுத்து மாயூரங் கொண்டு பல ஆராய்ச்சி புத்தி செலுத்துவது வெறும் ஆரவாரமேயாம். சிவநேயச் செல்வர்கள் மேற்படி விஷயங்களைப்பற்றிய பாரம்பரியமாக அறிந்தாற்பின் அவற்றை இந்துசாதனம் வாயிலாக வெளியிடுவது சைவ உலகத்திற்குப் பேருபகாரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பாபிஷேகத்திற்கு முகூர்த்த நிர்ணயம்

பிரம்மஸ்ரீ. ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள்

உத்தராயண காலத்தில் செய்வது உத்தமம். தக்ஷிணாயனத்தில் செய்வது மத்திமமாம், ஆனி, ஆவணி சித்திரை, வைகாசி, தை, பங்குனி இந்த ஆறு மாசங்களில் செய்வது உத்தமம். ஐப்பசி மத்திமம்; கார்த்திகை அதமம். பூர்வபக்ஷம் விசேஷம் அபரபக்கத்தை நீக்கவேண்டும். அபரபக்கத்தில் பஞ்சமித் திதிவரை எடுத்துக்கொள்ளலாம். திதிகளில் துவாதசி, தசமி, திரயோதசி உத்தமம். பிரதமை, ஏகாதசி, துதியை, திருதியை, சப்தமி, பஞ்சமி மத்திமம் கிழமைகளில் வியாழம், வெள்ளி, புதன், திங்கள் உத்தமம், ஞாயிற்றுக் கிழமையையும் கொள்ளலாம். நட்சத்திரங்களில் அச்சுவினி உரோகணி, பூசம், சித்திரை, புனர்பூசம் இவை உத்தமம், அத்தம், மிருகசீரிடம், உத்தரட்டாதி, அனுஷம் இவை மத்திமம்; பூரட்டாதி, உத்தரம், உத்தராடம், திருவோணம், இரேவதி இவை அதமம். அவிட்டம் சதயம் இந்த இரண்டும் அதமமாம். இராசிகளில் கும்பாபிஷேகத்திற்கு திராசியும், சிவலிங்கத்திற்கு உபயராசியும், உற்சவ மூர்த்திக்கு பலஸ்தாபனத்திற்கும் சரராசமாயிருத்தல் வேண்டும். உபயராசியிலும் கும்பாபிஷேகஞ் செய்யலாம். கும்பாபிஷேக ஆரம்பமுதல் கும்பாபிஷேக பரியந்தம் பூர்வபக்க அபரபக்க சம்பந்தமுடையதாயிருந்தால் தோஷமில்லை. மாசம் இரண்டு சம்பந்தமுடையதாயிருந்தால் செய்யக்கூடாது. வருஷம் இரண்டு சம்பந்தமுடையதாயிருந்தாலுஞ் செய்யக்கூடாது. அயனம் இரண்டு சம்பந்தமிருந்தாலுஞ் செய்யக்கூடாது. கும்பாபிஷேகத்திற்கு நாள் ஒற்றைப்பட்டதாயிருத்தல் வேண்டும்.

கலாகர்ஷணமுதல் கும்பாபிஷேக மிறுதியாக (1 (3, (5) (7) (9, 11) (13) (45) இவ்வாறுள்ள ஒற்றைப்பட்ட நாட்களில் வைத்தல் வேண்டும்,

சந்திரன் உச்சமாகவிருந்தால் எசமானுக்குச் சுகமுண்டு. சந்திரன் நட்பாயிருந்தால் செல்வமுண்டு. சந்திரன் சத்துரு ஸ்தானத்திலிருந்தால் சத்துரு அதிகப்படுவார்கள். சூரியன், சந்திரன், இராகு, புதன் இவர்கள் இலக்கனத்திலிருந்தால் அந்த கிராமமும் கிராமத்துள்ளவர்களும் நாசமடைவர். சுபக்கிரகம் உதயத்திலிருந்தால் சுகமுண்டாவதோடு தலைவிருத்தியுமுண்டாம். சுக்கிரன் மூன்றுமிடத்திலிருந்தால் ஏதோ விருத்தியுண்டாம். மூன்றுமிடத்தில் பாவக்கிரகங்களிருந்தால் சுகமுண்டாகும். சுக்கிரன் ஐந்தாமிடத்திலிருந்தால் சுகக்குறைவுண்டாம், ஆறுமிடத்தில் சந்திரனும் வெள்ளியுங்கூடியிருந்தால் தேவநூதனத்தை மையாயிருக்கும்படி செய்யும், ஏழில் சூரியனிருந்தால் யசமானுக்குத் தோஷமுண்டாம். ஏழில் செவ்வாயிருந்தால் அக்கினி பயமுண்டாகும். ஏழில் வெள்ளியிருந்தால் அர்த்தவைதைகளின் சேட்டையுண்டாம். எட்டாமிடத்தில் எந்த கிரகமிருந்தாலும் குலநாசத்தை யுண்டாக்கும். ஒன்பதில் சுபக்கிரகங்களிருந்தால் தருமமானது மென்மேலும் விருத்தியுண்டாம். ஒன்பதில் சந்திரன் பாபக்கிரகங்களுடன் கூடியிருந்தால் அந்த இடம் நாசத்தையடையும். வெள்ளியினுடைய அஸ்தமனத்தில் பிரதிஷ்டை செய்யக்கூடாது.

—தொடரும்

## வேலணைச் சைவப்பிரகாச வித்தியாசாலை

3ம் பக்கத் தொடர்ச்சி

இறந்த உபாத்தியாயனியும் அவ்வாறே இருந்தார்,

வித்தியாலய வளவில் மாரிக்காலத்தில் வெள்ளம் நிற்பதென்றும் இப்போது பதினாயிரம் ரூபாவரையிற் செலவு செய்து உயர்த்தப்பட்டிருக்கிறதென்றும் மிகவும் பாராட்டி எழுதினர். தீவுப்பகுதியில் குடியிருப்பவர்கள் அநேகமாய் நெல்வயல்களை மண்கொட்டி உயர்த்தியே வளவு அடைத்து வீடு கட்டியிருக்கிறார்கள். மாரிகாலங்களில் வெள்ளம் சட்டுப்பட்டு நின்றால் சில சமயங்களில் வளவுகளிலும் நிற்கத்தான் செய்யும். கடலுக்கு ஓடத்தொடங்கினால் மூன்று நான்கு நாட்களுக்குள் ஓடி வெள்ளம் வடிந்து விடும், அப்படியான காலங்களில் வித்தியாலய வளவிலும் சிலசமயம் வெள்ளம் நிற்பதேயன்றி இவர் எழுதியவிதமாக இல்லை. அப்படி வளவு பதிவாயிருந்தால் அந்தவிடத்தில் மார்கழி மாதத்தில் புகையிலைக் கன்று வைப்பது நடக்கும், அரசினர் மத்திய பாடசாலைக்கு என்று பணம் சேகரித்ததேயன்றி வேலணைச் சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு பண் போடப் பணம் சேகரிக்கவில்லை. பாடசாலையம் விறாந்தையும் ரூபா ஆயிரம்வரையில் உண்டு அந்தப் பணம் பாலர் வகுப்பு இருந்த கட்டிடம் விற்ற பணம். வளவுத் தோட்டக் குத்தகைப் பணம், வளர்க்குவிருக்கும் கடைகளின் வாடகைப் பணம், மனேஜர் ஸ்ரீமத் ச. குமாரவேலுப்பிள்ளை அவர்கள் இறந்ததும் அடைத்தபின் வருஷாதீனமாய் வந்த கலாசாத்திரிப் பணம், ஆசிரியர் நன்கொடைப் பணம், (அதாவது கட்டிடம், தளபாடம் முதலியவற்றுக்குத் தரிய பணம்) முதலிய பணங்களேயாகும். இந்தப் பணங்களைப் பற்றிச் சொல்லாது தம் பணம் போன போக்காக இந்தப் பகுதிச் சைவ மக்களே வித்தியாலய மடாலயத்திற்கு மணம் போடப் பணம் கொடுத்தார்கள் என்று நன்றி பாராட்டி எழுதினர். சைவப்பிரகாச சபா சங்கத்துக்கு ஸ்ரீமத். வி. ச. குமாரவேலுப்பிள்ளை அவர்கள் குறித்த பாடசாலையும் வித்தியாலயமும் ஆகியவைகளைப் பழுதுபார்த்துத் திருத்தும்படி ஒப்படைத்தாரேயன்றி மடாலயத்தை அடியோடு பெருமளவில் இடித்தழித்துவிடும்படியும் வித்தியாலயத்தை அதற்குரிய கட்டிடத்தினின்று மகற்றித் தோட்டத்திறந்த போடப்பட்டிருக்கும் போலிக் கொட்டகையில் வைத்து நடத்தும்படியும் எழுதினதில்லையே. அரசினர் மத்திய பாடசாலையை இந்தப் போலிக் கொட்டகையில் வைத்து வளர்த்தல் தற்காலிகமாக நடத்தக்கூடாது என்றுங் குறைய எழுபது வருஷங்களாக வளவையில் வித்தியாலயத்தை ஸ்தாபித்த பிள்ளையவர்களும் அவர்களுக்குப் பின்னுள்ளவர்களும் நடத்திய வண்ணம் பழுதாம்.

## காரைநகர் தமிழாசிரியர் சங்கம்

22 3.46 ல் நடந்த காரைநகர்த் தமிழாசிரியர் சங்கப் பொதுக் கூட்டத்திற் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது:—

"5-ம் வகுப்பு முடியவுள்ள வகுப்புக்கள் தமிழ்ப் பாடசாலையிலே வைக்கவேண்டும். 3 ம் வகுப்புக்கு மேற்பட்ட வகுப்புக்கள் ஆங்கில பாடசாலையில் வைத்திருக்கலாமென தசம்பர் கூட்டத்தில் வித்தியா சங்கம் நிறைவேற்றிய தீர்மானம் தமிழ்க் கல்வியையும், தனிப்பட்ட இடங்களில் இருக்

(தொடர்ச்சி பின்வரும்)

# வேதாந்தத்தெளிவாம் சைவசித்தாந்தம்

திரு. சி. நாகையா அவர்கள்

வேதாந்தமென்ற சொல் இரண்டு கருத்துக்களை யுடையது. ஒன்று காரணப்பெயரால் வருவது மற்றது இடுகுறிப் பெயரால் வருவது. வேதசிரசு என்று உபநிடதங்களுக்குப் பெயர். அக்காரணத்தால் உபநிடதங்களால் பிரதிபாதிக்கப்பெற்ற மார்க்கத்தைக் குறிக்கும். இது ஞானப்படியில் லோகமார்க்கமென்றும் பெரியோர் கருதுவர். மற்றது வியாச பெருமானால் வகுக்கப்பெற்ற பிரமசூத்திரம். வேதாந்த சூத்திரமுமொருபெயர். இது வேதாந்தத்தின் ஞானகாண்டப் பொருளைக் கூறும். இதற்குச் சிறந்த பாஷியங்கள் நாலுண்டு. அவைகளுள் ஸ்ரீ சங்கராச்சாரியரவர்களே வேதமாபிரேமெற்பப் பாஷியஞ் செய்தாரென்பது அறிஞர் கூற்று. அதை ஏகன்மவாதக கொள்கை யென சொல்லுமெனர். இக்கொள்கையைச் சைவர்கள் தங்களுடைய அத்துவிதக் கொள்கையாகிய சுத்தாத்துவிதத்தி லிருந்து பிரித்தறிதற்காக மேலோர்... ஏகான்மவாத மெனப்படும் ஒரு பெயர், மாயாவாதமென பெயருமுள இக்கொள்கைப் பட்டிக்குப்போதலும் அப்படி இப்பழுது சொல்லுவதை ஆசாரியனை விருப்புவதில்லை. ஆசையால் பிரம்மவாதம் அல்லது ஏகான்மவாதம் என்ற பெயரால் இக்கொள்கையை அழைப்பது நலம்.

பாஷியங்கள் செய்த நால்வருள்ளும் ஸ்ரீ. நீலகண்டரே சைவசித்தாந்தச் சார்பாகப் பாஷியஞ் செய்தவரென்பர். ஆனல் அவர்தானும் சைவசித்தாந்திகளுடைய உயிர்ப்பொருளாகிய அத்வைத நிலையை, ஆகமங்களிற் பெறப்படுவதுபோல அவ்வளவு தெளிவாகக் காணவில்லையென்று சைவர் சொல்லர். ஏனை மூவருடைய படிப்புள், சிலசில விதியாசங்களைவிட, பிரமமவாதமாகும். இதன்படி கடவுள் ஒருவரேயுண்டு. அதுதான் நித்யப்பொருள் ஆன்மாக்களென்ற வேறொரு இரண்டாம் பொருளில்லை, அப்படி யுண்டென நினைப்பதொரு மயக்கம். அந்த மயக்கம் அவித்தையால் அல்லது அஞ்ஞானத்தாலுண்டானது. இவ்வ மேரபடின் அப்படித் தோன்றுதலொன்றும், ஆணவம் என்ற ஒன்று பொருளுமில்லை யெனபர். ஆனால், சைவசித்தாந்திகள் கடவுள் ஆன்மா மலம் ஆகிய இம்மூன்றும் அநாதி நித்தியப் பொருளெனபர். கடவுளுக்கும் ஆன்மாவுக்கு மிருக்கிறதும ஆன்மாவிற்கும் மலத்திற்குமிருக்கிறதுமாகிய சம்பந்தத்தையே அத்துவிதமெனபர். பிரமவாதிகள் சொல்வதைச் சுருக்கிச் சொனனுல் கடவுள் எல்லாமாயுமிருக்கின்றார் என்பதாகும். சைவர்கள் இந்தவுண்மையை ஏகான்மவாதிகளைப்போலவே ஏற்றுக்கொள்ளுகின்றனர். ஆனால் அவர்கள் அதோடு நின்றுவிடாமல் அவையன்றி ஒரு கருமத்தையுஞ் சேர்த்துக்கொள்ளுகிறார்கள். எல்லாப் பொருளுமாயும், சத்துமசத்துமாயும், அதற்கப்பாலுமாய்க் கடவுளிருக்கிறாரென எல்லையற்ற தன்மையும் பெறச்செய்யுகிறார்கள். வரையறுத்து எல்லாமாயிருக்கிறாரென்று சொல்வதிலும் எல்லாமாயும அதற்கப்பாலுமாயிருக்கிறாரென்பது கூடத்தானே! மேலும் எல்லாமாயும் அல்லவுமாயுமிருத்தற்பாலதிலும் உடனுமாய் நிற்கின்றார் கடவுள் என்று அவரது உதவுந் தன்மையையுங்காட்டி ஆன்மாக்கள் தானேயாயும், அவைகளின் வேறாயும், உடனாயுமிருக்கிறாரென்று

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

### புதன் ஏப்ரல் 10

காலை 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 இசைக் கதம்பம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 திரை இசை இசைத்தட்டு 8.30 திருவீழிமிழலை என் சுப்பிரமணியபிள்ளை வயலின் 9 முடிவு.

1 ஆரம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 எம் பி ஸ்ரீனிவாசன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 கோடைக் கல்வி 2.30 முடிவு.

மாலை 5 திருவையாறு டி வைத்தியநாதய்யர் பாட்டு 5.40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் வானிலை 6.15 ஜே எம் அப்துல்கனி ஸிதார் 6-30 கிராம நிகழ்ச்சிகள் 7 சரல் வகை இசைத்தட்டு 7.30 தமிழில் செய்திகள் 7.45 நமது தபால் பெட்டி 8 திருவையாறு டி வைத்தியநாதய்யர் பாட்டு 8.30 திருவீழிமிழலை என் சுப்பிரமணிய பிள்ளை வயலின் 8.45 ஏ ன் பள்ளிகொண்டமையா இசைநாடகம் 9 ஆங்கில நிகழ்ச்சி 9-15 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9. 0 அறிவிப்புகள் வானிலை 9.45 ஐரோப்பிய சங்கீத இசைத்தட்டு 10-30 முடிவு.

### வியாழன் ஏப்ரல் 11

காலை: 7.15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 ஏ டி பி சந்தானம், ஏ எஸ் ஆர் கோவிந்தன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 எஸ் எஸ் மணி பாட்டு 8-30 என் கிருஷ்ணவேணி பாட்டு 9 முடிவு.

1 ஆரம்பம் இசைத்தட்டு 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 எஸ் எஸ் மணி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக்கல்வி 2.30 முடிவு.

மாலை 5 சிதம்பரம் கே கோமதி அம்மாள் பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் வானிலை 6-45 கிராம நிகழ்ச்சிகள் 7 குரல் வகை இசைத்தட்டு 7-15 இலக்கியவாசகம் 7.30 தமிழில் செய்திகள் 7-45 கோலார் ராஜம் பாட்டு 9 அர்பாநாடகம் 9-15 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9-45 ஜலதரங்கம், வீணை 10 இசைவேளை இசைத்தட்டு 10 30 முடிவு.

### வெள்ளி ஏப்ரல் 12

காலை 7-15 ஆரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7-30 அரியக்குடி ராமானுஜ ஐயங்கார் இசைத்தட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 திருச்சி வாத்யகோஷ்டி 8.30 வட்டனூர் டி எஸ் மதுரம் சகோதரிகள் பாட்டு 9 முடிவு.

1 ஆரம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 டி கே நாராயணன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக் கல்வி 2-30 முடிவு.

மாலை 5 ஸ்ரீ வைகுண்டம் எஸ் பரமசிவம்பிள்ளை பாட்டு 5-40 குரான்ஷரீப் விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் வானிலை 6.15 வட்டனூர் டி எஸ் மதுரம் சகோதரிகள் பாட்டு 6.30 கிராம நிகழ்ச்சிகள் 7, ஆனந்தமயம் இசைத்தட்டு 7 15 செய்தி விளக்கம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 இரு வாத்திய இசை இசைத்தட்டு 8 கர்விடைக்குறிச்சி எஸ் ஹரிஹர ஐயர் பாட்டு 9-15 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 உலக விவகாரங்கள் 10 இசைவேளை இசைத்தட்டு 10-30 முடிவு.

வேதாந்தத்திலும் பார்க்கத் தெளிவு காட்டிச் சித்தாந்தம் நிற்கும். சச்சித் ஆனந்தமென்கிற சொற்பொருளே இதனை நனிவிளக்கும். கடவுள் எல்லாமாயுமிருக்கிறார் என்ற உண்மையை எல்லாம் கடவுள் என்று மாற்றி எல்லாவற்றிலுமொருபகுதியாகிய சிதப்பொருள் ஆன்மா. அந்த ஆன்மா கடவுள் என்ற பிழையான முடிபே இதற்குக் காரணம் போலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் நடை வளர்ச்சி

(மட்டுவில் திரு. சே. சிவலிங்கன்)

(முற்றொடர்)

**இலக்கியத்திற் கிலக்கணம்**

தமிழ்மொழியிற் பரந்து கிடக்கும் இலக்கண நூல்கள் அளப்பில, இங்ஙனம் அனைத்திற்கும் வரம்புடை இலக்கணஞ் செறிந்த மொழிகள் யாண்டுமில்லை. இஃதெந் தமிழன்னைக்குச் சாலப் பெருமையளித்தாலும் எதற்கும் இலக்கணத்தையே கட்டியணைவார் செயலாற் பெரும் இழுக்குடைத்தாகின்றது. இலக்கியத்திற் கிலக்கணமா? இல்லையேல் இலக்கணத்திற் கிலக்கியமா? என்னும் தர்க்ககால மொருவாறொழிந்து செல்கிறது. இலக்கியத்திற்காகவே இலக்கணம் அமைந்ததென்பது இக்காலத்தவர் பலரின் கோட்பாடு. அஃதே பொருத்தமுடைத்து. எக்கருமத்தைப் புரிதற்கும் சில விதிகள் - நியமம் வேண்டியவைதாம். ஆயின், விதிகள் இருக்கின்றனவே யென்று அவையிற்றைக் கட்டியணைந்து முத்தமிடுதலாற் போந்த பயன் என்னை? எதற்கும் சில விதிகள் இன்றியமையாதனவே. அவை அளவு கடந்த கட்டுப்பாடுடையனவா யிருத்தல் எற்புடைத்தன்று. கட்டுப்பாடுடையவற்றின் கண்ணேயே விதியைக் கடத்தலும் இயையுர். ஏஃது மக்கண்மாட் டியற்கையாயமைந்த நூதனப் பிரியமே. யாங்குக் கட்டுப்பாடு ஆண்டுக் கடத்தலுமுண்டு. ஆகவே கட்டுப்பாடுகள் சிலவற்றையொழித்துக் கலைகளை வளர்க்க முயலவேண்டும்

**நாகரிகப் புலவர்**

யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல், வள்ளுவர்போல், இளங்கோவைப்போற் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை; உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை. இவர்களனைவரும் கம்பரும் வள்ளுவரும் இளங்கோவுந்தாமே. இக்காலத்திற் றமிழன்னையீன்ற நாகரிகக் கம்பர், வள்ளுவர், இளங்கோ எங்கே? யாண்டுமிருக்கின்றனரா? வரகவி சுப்பிரமணிய பாரதியார் போன்ற நாகரிகப் புலவர்கள் இருந்தனராம். தேசிகவிநாயகம் பிள்ளை, சுத்தானந்தபாரதியார் என்னும் நவநாகரிகர் இருக்கின்றனரே. ஆயின், அன்னோர்மாட்டுக் குற்றங் காட்டிக் குதர்க்கம் புரிவார் பலரும் மலிந்து கிடக்கின்றனர். இத்தகையோர் சிறைச்சாலையை அடைந்தக்காலே தமிழன்னை சிறைச்சாலையினின்றும் விடுதலை பெற்றுய்வாள். நாவலர் பெருமானில் மாத்திரம் இன்னும் கை வைத்திலர். அன்னாரிற் கை வைத்தக்கால் கைவரிசை காட்டுவதற்கு யாழ்நகரிற் பலர் மலிந்து கிடக்கின்றனரே. ஆதலின் அஞ்சவேண்டியதில்லை. 'அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே' என நாவலர் பெருமானின் விடயத்திற் றுணிந்து கூக்குரலிடலாம். எனினும், சிலர் வாலி மாட்டு இராமன் பாணம் விடுத்தாங்கே மறைந்து நின்று காந்துரைக்கின்றனர். அத்தகையோர் செயல் ஆண்டகைமையதன்றே. ஆதலின் அதுபற்றி நாங் கருதற்கில்லை.

வரும்.


## விளம்பரம்

### உபஉணவுப் பொருட்களின் விநியோகம்

சாதாரணக் கூப்பன் சமர்ப்பிக்கும் ஒவ்வொருவருக்கும் 8-4-46 தொடக்கம் ஒரு றூத்தல் கோதுமைமா கொடுக்கப்படும்.

தற்சமயம் கோதுமை அரிசி இல்லாமையால் 8-4-46 தொடக்கம் கொடுக்கப்பட வேண்டிய அரைப்படி கோதுமை அரிசிக்குப் பதிலாக ஒரு றூத்தல் கோதுமைமா 15-4-46ல் தொடங்கும் கிழமையில் அந்தக் கிழமையில் கொடுக்கப்படும் கோதுமை மாவுடன் சேர்த்துக் கொடுக்கப்படும்.

உதாரணமாக ஒரு சாதாரணக் கூப்பனுக்கு:- 8-4-46ல் தொடங்கும் கிழமையில் கொடுக்கப்படும் உணவுப்பொருட்கள் 1 படி அரிசி, 1 றூத்தல் மா.

15-4-46ல் தொடங்கும் கிழமையில் கொடுக்கப்படும் உணவுப் பொருட்கள் 1 படி அரிசி, 3 றூத்தல் மா.

இதன்பின்பு ஒவ்வொரு சாதாரணக் கூப்பனுக்கும் ஒரு படி அரிசியும், ஒரு றூத்தல் மா, $\frac{1}{2}$ படி கோதுமை அரிசி அல்லது குரக்கன் வழங்கப்படும். கோதுமை அரிசி அல்லது குரக்கன் இல்லாவிட்டால் ஒரு றூத்தல் கோதுமைமா கூடுதலாய்க் கொடுக்கப்படும்.

மற்ற வகுப்புக் கூப்பன்களுக்கும் இம்முறையே வீதப்படி கையாளப்படும்.

எம். ஸ்ரீகாந்தா,
யாழ்ப்பாணம் உபஉணவுக் கட்டுப்பாட்டு தலைவருக்காக.

யாழ்ப்பாணம், 5-4-46
G 3 9



## புகையிலை தேவை

பெருந்தொகையில் யாழ்ப்பாணப் புகையிலை தரக்கூடியவர்கள், என்ன விலையில், மாதம் எவ்வளவு, தரமுடியும் என்பதைப் பின்வரும் விலாசதாருக்கு எழுதுக: வங்கி மூலமாக உரக்கம கொடுக்கப்படும்.

**T. N. ரத்தினம்,**
82, அம்பாங்தெரு,
கோலாலம்பூர், மலேயா.

Mis 9 9-4—13-5



வருகிறார்கள்! எதிர்பாருங்கள். வருகிறார்கள்!

உலகப் பிரசித்தி பெற்ற

## கமலா சர்க்கஸ்

திறமை வாய்ந்த நிபுணர்களாகிய
ஆண்களும் பெண்களும்

**3 பயங்கரமான சிங்கங்கள் 16 குதிரைகள்**
**செம்மறியாடுகள்**

இன்னும் பல்வேறு திறமைவாய்ந்த மிருகங்கள்

## யாழ்ப்பாணம் முற்றவெளியில்

ஆரம்பமாகும் தினத்தை எதிர்பாருங்கள்.

உலகம் முழுவதிலுமே சிறந்ததெனவுள்ள பறக்கும் ரப்பேஸிய' (Trapezium)விளையாட்டுப் பரமானந்தம்

Mis 10 9-4—30-4


# கந்தபுராணக் கவி நுட்பம்

## திருவவதாரப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை அவர்கள் வாய்க் கேட்டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளியிடப்பட்டுள்ளன.

உருவொடு தொழில்பெய ரொன்று மின்றியே
பரவிய நீயவை பரித்து நிற்பது
விரவிய வுயிர்க்கெலாம் வீடு தந்திடுங்
கருணைய தேயலாற் கருமம் யாவதே.

வடிவம் செயல் நாமம் முதலிய எதுவுமில்லாது, எங்கும் வியாபகமாயுள்ள தேவரீர், அவைகளைப் பொருந்தித் தோன்றுவது, உலகத்திலே செறிந்து பரந்துள்ள உயிர்களெவற்றிற்கும் முத்தியின்பத்தைக் கொடுத்தருள வேண்டுமென்ற திருவருளின் திறனேயன்றி வேறு செயல்குறித்தல்லவே என்பது கருத்து.

"ஊரிலான் குணங்குறியிலான் செயலிலான்...." என்றாங்கு, நிஷ்களராகிய தேவரீர் சகளராகப் புலப்படுதல் ஆன்மகோடிகளின் பாற்பட்ட தமியேங்களை ஆட்கொண்டருளுதற்கன்றோ எனத்தேவர்கள் சிவபிரானை வேண்டினரென்பதாம்; உருவொடு தொழில் பெயரொன்றுமில்லாத இறைவன் அவற்றைக் கொள்வது ஆன்மாக்களை யீடேற்றல் வேண்டுமெனத் திருவுளத்திற் கொண்ட கருணை பற்றியேயாமென்பதனை:-

உருவருள் குணங்களோடும் உணர்வரு ளுருவிற்றோன்றுங்
கருமமும் அருள் அரன்றன் கரசரணாதிசாங்கம்
தரும்அருள் உபாங்கமெல்லாந் தானருள் தனக்கொன்றின்றி
அருளுரு வுயிருக்கென்றே யாக்குவ னமலன்றானே"

எனவருஞ் சிவஞான சித்தித் திருவிருத்தத்தான் உணர்தலாகும். கருணையதே என்பதில் ஏகாரம் தேற்றமாம்.

[அவை - அவ்வுருவோடு குணஞ் செயல்கள்] (34)

அவ்வுயிர் யாவுநின் னருளி லாவழிச்
செய்வினை புரிகில சிறிது மாதலால்
வெவ்விய நயப்போடு வெறுப்பிலாதநீ
யெவ்வகை யோவுல கியற்றுந் தன்மையே.

அந்த ஆன்மாக்களனைத்தும் தேவரீருடைய அருளில்லா தொழியின் சிறிதேனுந் தொழிற்படா. ஆதலால் துன்பத்திற் கேதுவாகிய விருப்பும் வெறுப்புமில்லாத தேவரீர் உலகத்தை நடாத்துந் தன்மை அடியேங்களுக்குப் புலப்படவில்லையென்பது கருத்து.

அவனையன்றி யணுவுமசையாதாதலின் தேவரீருடைய திருவருளின்றி எவையும் தொழிற்படா. தொழிற்பட வேண்டுமேல் தேவரீர் பஞ்சகிருத்தியங்களையுஞ் செய்தருளல் வேண்டும்; விருப்பு வெறுப்பற்ற தேவரீர் ஐந்தொழிலை யாற்றுவது எதன்பொருட்டென்பது எங்களுக்கு மயக்கமாயிருக்கின்றது தேவரீர் செய்யுந் திருவிளையாட்டின் இரகசியத்தை யாமுணர்கிலேமெனத் தேவர்கள் இறைவனைத் தோத்திரம் பண்ணினரென்பதாம்.

நயப்பு-ஆசை, இங்கே வெவ்விய நயப்பென்றார் ஆசையே பிறவிக்குக் காரணமாய் அப்பிறவிதோறும் உழலுவித்தலின், ஆசையே தீயவழியிற் செலுத்தலால் வெவ்விய நயப்பென்றாரெனினுமாம்.]

முன்னதின் முன்னென மொழிது மேயெனிற்
பின்னதின் பின்னுமாய்ப் பேச நிற்றியால்
அன்னவை யேயெனி லொழிந்த தல்லையோ
என்னென நின்னையா மேத்து கின்றதே.

[முன்னதின் முன்னென மொழிதுமேயெனில் - முன்னைப் பழம்பொருட்கு முன்னைப்பழம் பொருளென்று சொல்லுவேமாகில், பின்னைப் புதுமைக்கும்பின்னைப் புதுமையெனப் பேசவும் நிற்கின்றீர்; அம் முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம் பொருளும் பின்னைப் புதுமைக்குப் பின்னைப் புதுமையாகிய அவைகளாகில், ஒழிந்த மத்தியிலுள்ளதும் தேவரீரல்லீரோ, அங்ஙனமாயின் என்னென்று தேவரீரை யாம் துதிப்பது எனவே, சமஸ்தமும் நீரென்றாரெனக.] (36)

## வீரசுதந்திரம் வேண்டி நின்றார் வேறொன்று கொள்வாரோ

(1ம் பக்கத் தொடர்ச்சி

லது இதுவேயாம். எமது இறுதி லட்சிய வெற்றியில் எமக்குப் பூரண நம்பிக்கையுண்டு அதே நம்பிக்கையைக் கொள்ளும்படி பாரத சமுதாயத்தை நான் வேண்டிக்கொள்ளுகிறேன். 1939-ம் ஆண்டுக்கும் 1942ம் ஆண்டுக்கு மிடையில் எமது சத்துருக்கள் எத்தனைவிதமான படுதோல்வியும் அவமானமு மடைந்தனர். அவற்றைப் பொருட் படுத்தாது அவர்கள் தாம் கொண்ட லட்சியத்தை விடாது தம் கருமத்தில் கண்ணுங் கருத்துமா யிருந்தமையினுல் இன்று அவர்கள் இங்கிலையில் உள்ளனர். எம்முடைய லட்சியமோ மகாபுனிதமானது. எனவே நாமும் ஏன் அத்தகைய வீரத்துடன் எதற்கும் அஞ்சாத மனப்பான்மையுடன் இருக்கவொண்ணாது. பாரதநாட்டை முற்றாக அடிமைப்படுத்த பிரிட்டனுக்கு 100 ஆண்டுகள் சென்றன. எனவே, எமது தாய்நாடின்று அவர்களை அகற்றுதற்குக் கொஞ்சக்காலம் செல்லுந்தான். அதனையிட்டு நாம் வியப்படையவோ சோர் வடையவோ காரணம் இல்லை.

**இனி நடக்கவேண்டியது**

இந்திய மக்கள் பிரிட்டிஷ் இராணுவத்திற் சேர்ந்து எமக்கெதிராகப் போர்புரிந்ததால் எமது வேலைமிகவும் கஷ்டமாகின்றது அப்படி யிருப்ப, இந்தியாவில் வசிக்கும் எம் சகோதரரின் பொறுப்பும் அதிகமாகின்றது. இதுவரை செய்துவந்த தியாகங்களிலும்பார்க்க இன்னும் கூடியவற்றைச் செய்ய எம்மக்கள் தயாராகவேண்டும். அத்துடன் பாரதநாட்டுக்கு வெளியிலும் உள்ளேயும் இருக்கும் சுதந்திர இயக்கங்களுக் கிடையே கூடிய தொடர்பு இருத்தல் வேண்டும். இன்னும் ஒரே வார்த்தை: சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டிலும் அதுபோன்ற ஏனைய மகாநாடுகளிலும இந்திய சுதந்திரத்தின்பொருட்டுக் கிளர்ச்சி செய்தல் சரிதான். ஆனுல் இந்த மகாநாடுகளால் இந்தியாவுக்கு நன்மை கிடைக்குமென்று எவரும் மனப்பால் குடிக்கவேண்டியதில்லை நாம் எம்முடைய பலத்தில் நிற்கவேண்டுமேயன்றி, மற்றும் அந்நியர் தயவை எதிர்பார்க்க வொண்ணாது. நாம் முயற்சி செய்யவேண்டும். நாம் தியாகஞ் செய்யவேண்டும்; நாம் எமது இரத்தத்தைச் சிந்தவேண்டும். இந்தியா எங்கள் தேசம்; அது விடுதலை பெறவேண்டும்; அவ்விடுதலையும் வந்தே தீரும். வீரசுதந்திரமே எமக்கு வேண்டும்; வேறொன்றும் வேண்டியதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேலைப்புலோலி கதிரைவேற்பிள்ளை தமிழ்ச் சங்கம்

பார்த்திப வருடம் பங்குனிமாசம் 4ந் திகதி (17 3.46) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 7 மணியளவில் பசுபதீசுவரர் கோவில் சந்நிதியில் (பகாவேலன்தணி வாசிகசாலை மண்டபத்தில்) சதாவதானம் நா. கதிரைவேற்பிள்ளை அவர்களின் ஞாபகார்த்தமாக ஒரு சங்கமொன்று திரு. மு. சு. கந்தையா நியாயதுரந்தரர் அவர்கள் தலைமையின்கீழ் கூடியது. இச்சங்கத்துக்குச் சதாவதானம் மேலைப்புலோலிக் கதிரைவேற்பிள்ளை தமிழ்ச் சங்கமெனறு பெயர் சூட்டப்பெற்றது. இத்தலைவரே இச்சங்கத் தலைவராகவும் திரு. வே. தா. சி. சிவகுருநாதன் (தலைமையாசிரிய ஆனந்தக் கல்லூரி) க. சிவராசா (ஆசிரியர்) இ. தம்பிராசா பெருமனார் ஆகியோர் உப தலைவர்களாகவும் ஆசிரியர் திரு தா. க. சுப்பிரமணியப், வித்துவான் சதாசிவம், திரு. மயில்வாகன நாவலர் ஆசிரியர் ஆகியோர் காரியதரிசிகளாகவும் திரு. சி. முத்துக்குமாரசுவாமி ஆசிரியர் அவர்கள் தனாதிகாரியாகவும் திரு. சபாபதிப்பிள்ளை சோமசுந்தரம், சு. சபாபதிப்பிள்ளை (நியாயதுரந்தரர்) கு. சோ. சரவணமுத்து, சு. மயில்வாகனம் உலாந்தா ஆகியோர்கள் நிர்வாகசபை அங்கத்தவர்களாகவும் தெரிவு செய்யப்பெற்றனர். சதாவதானம் ஸ்ரீமான் நா. கதிரைவேற்பிள்ளை அவர்களைப்பற்றிய பல குறிப்புரைகள் நிகழ்ந்தன. தலைவர் பெருமைமிக்க சேவா பாராயணத்துடன் சங்கம் இனிது முடிவுற்றது.

## காரைநகர் தமிழாசிரியர் சங்கம்

4-ம் பக்கத் தொடர்ச்சி

...கும் வயது குறைந்த பிள்ளைகள் இவ்வசதிக் குறைவால் பயில்வதையும் பாதிக்கின்றது; தமிழ்ப்பாடசாலைகளைப் பொறுத்தமட்டில், பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியர்களின் மதிப்பையும் குறைக்கின்றது. ஆங்கில பள்ளிக்கூடங்கள் அரசினர் செய்யும் வசதிகளை உபசாரி, ஆசிரியர்களின் சம்பளம், பாதுகாப்பு நன்கொடை என்னும் இவைகளைத் தமிழ்ப் பாடசாலைகளுக்கும் சமமாக உபயோகத்தால், ஆ... பாடசாலைகளின் தமிழ் ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளும் ஆங்கில பாடசாலையிற் போலக் குறையாது வளரும். மேற்குறிப்பிட்ட கூரிய கலைச் செய்வதற்கு முயற்சியெடுக்க உடனடியாக ஒழுங்கு கொள்ளப்படுவதுடன், பாடுபடுகிறவர்களுக்கும் அரசாங்க சபையில் எமது வாக்குரிமையை உபயோகிக்க வேண்டும்". சுடி

## அரசாங்க உத்தியோகத்தருக்கு வேதன உயர்வு

அரசாங்க உத்தியோகத்தரது வேதன விஷயமாக விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட சபை இப்போது தனது அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. அச்சபையினர் அரசாங்க சேவையில் உள்ள சகலர்க்கும் இப்போதுள்ள வேதனம் போதாது. அதனை அதிகரிக்க வேண்டும் எனச் சிபார்சு செய்திருக்கிறார்கள்.

## கொழும்பு விவேகானந்த சபை

இலங்கைக்குத் தற்போது விஜயஞ்செய்திருக்கும் பம்பாய் இராமகிருஷ்ணசங்கத் தலைவர் ஸ்ரீமத் சுவாமி சம்புத்தானந்தஜி அவர்களும் திருவனந்தபுரம் இராமகிருஷ்ண சங்கத் தலைவர் ஸ்ரீமத் சுவாமி தபஸ்யானந்தஜி அவர்களும் 'தற்காலத்தில் எமக்கு வேண்டிய சமயம்' என்னும் பொருள்பற்றிப் பங்குனிமாசம் 18ந்திகதி (31-3-46) ஞாயிற்றுக்கிழமை மேட்டுத்தெருவிலுள்ள சபை மண்டபத்தில் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். சபையின் தலைவராலும் அத்துவக்காத் திரு. ந. நடராசா அவர்கள் கூட்டத்துக்குத் தலைமை வகித்தனர்.

## தமிழ் நிலையம்

பருத்தித்துறையைச் சேர்ந்த தும்பளைத் தமிழ் நிலைய 2ம் ஆண்டு விழா தும்பளைச் சிவப்பிரகாச வித்தியாசாலையில் வருஷப் பிறப்பன்று (13-4-46) சனிக்கிழமை மாலை நடைபெறும். தலைவர் ஸ்ரீமான் த. இராமநாதபிள்ளை B. A., பேச்சாளர் வைத்திய கலாநிதி திரு. வி. கனகசபை, திருவாளர் வித்துவான் பண்டித சைவப்புலவர் க. வேந்தனார், சங்கீதம் சங்கீத வித்துவான் A. நடராஜபிள்ளை புல்லாங்குழல்: பிரமஸ்ரீ R. மூர்த்திஐயர் என மேற்படி நிலையக் காரியதரிசி தெரிவிக்கிறார்.




REGD

## கிறைப் - விற் - டி

(GRIPE—VIT—D)

குழந்தைகளுக்கு ஆரோக்கியத்தைத் தரும்

வயிற்றுவலி, புளிப்புத்தன்மை, உவாந்தி, வாய்வுத்தன்மை, வலி, பல்லரும்பும்போதுள்ள வருத்தம், வயிற்றோட்டம், விக்கல் முதலிய

குழந்தைகளின் சகலரோகங்களுக்கும் நிச்சய நிவாரணம்

### கிடைக்கும் இடங்கள்:

கொம்மேஷல் பிறெஸ்
டயறம்ஸ்
சிற்றி டிஸ்பென்ஸரி
நியூற்றன்ஸ்
} பெரியகடை, யாழ்ப்பாணம்.

றோயல் பாமேசி
றோயல் டிஸ்பென்ஸரி
மெடிக்கல் ஹோல்
யாழ்ப்பாண ஐக்கியசங்கக் கடை
} ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.

K. C. தெட்சணாமூர்த்தி, காங்கேசன் துறைறோட், பெரியகடை, யாழ்ப்பாணம்.

இலங்கையிற் பிரதம விநியோகஸ்தர்:

மொடேண் ஏஜென்சீஸ்,
சிலாபம், (இலங்கை)

(Mis 8 . 31—31.'2 46)

வெற்றியைப் பின்தொடர்ந்து இதோ வந்துவிட்டோம்

## அஜ்மீர் ஜெனரல் அஷூரன்ஸ்

### வீமாக்கொம்பனி லிமிற்றெட்

ஸ்தாபிதம் 1907

எமது அதிசய சேவையின் அற்புத வெற்றி

| | | |
|---|---|---|
| இப்போதுள்ள பொலிசிகள் ரூபா | 700,00,000—00 | மேற்பட்டது |
| இதுவரை கொடுபட்டதொகை ரூ | 113,00,000—00 | ,, |
| இப்போதைய இருப்பு ரூபா | 170,00,000—00 | ,, |
| 1944ம் ஆ. வருஷாந்த வருமானம் | 39,45,103—00 | ,, |

ஆயுள், அக்கினி, தொழிலாளர் நஷ்டஈடு, விபத்து முதலியவற்றிற்கு இன்ஷூர் செய்யப்படும்

எவருக்கும் தகுதியான குறைந்த கட்டணப் பணம் உடையது

இலங்கையில் சகலபாகங்களிலும் ஏஜென்ஸ் தேவை

நல்ல சம்பளமும் உத்தியோக நிலைபரமும் கொடுக்கப்படும்

விபரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்

கிளைக் காரியதரிசி, டொன் கரலிஸ் கட்டிடம்,
91, முதலாம் குறுக்குத்தெரு,
புறக்கோட்டை, கொழும்பு.

Mis 154 29-11-45—30-11(தி)

## —சங்கீத அபிமானிகளுக்கு ஓர் பொக்கிஷம்—

அன்பர்களே! உங்கள் அருந்தநணத்தை இழந்துவிடாதீர்கள்.

பழுதடைந்த வாத்தியக்கருவியை உடனே எங்களிடம் கொண்டுவாருங்கள். வீணை, தம்புரா, பிடில், ஹார்மோனியம் முதலியவற்றை வெகு நேர்த்தியாகவும் புதிதுபோலவும் உடனுக்குடன் பழுதுபார்த்துக் கொடுப்போம். புதிய ஹார்மோனியங்கள் விலைக்கிருக்கின்றன, புதிய ஹார்மோனியம் தயாரிப்பதிலும் பழுது பார்ப்பதிலும் வெகு திறமை வாய்ந்தவர்கள் எங்கள் கம்பனியில் இருக்கிறார்கள். குறைந்தது மூன்று வருட உத்தரவாதம் அளிக்கப்படும்.

### கல்கத்தா மோகன புளூட் ஆர்மோனியக் கம்பனி

வண்கிழக்கு, சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம்.

484. K. K. S றோட். Mis 242 8-3—8-4

## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,3670**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகோள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Y 12 20-11-45—20-11-46 (தி)

## பேர்பெற்ற பேசல் மிஷன் கலிக்கற் ஓடுகள்

உலகப் பிரசித்திபெற்ற, திறமானவையும், நன்மதிப்பு உள்ளவையும், பேசல் மிஷன் கலிக்கற் ஓடுகளே. மிகக் குறைந்த தண்ணீரை உறுஞ்சுவன. கடைகளில் விலைப்படும் பலதினிசு ஓடுகளையும் நிறுத்துப்பார்த்துத் தண்ணீருள் நனையவிட்டுப்பின்னும் நிறுத்து எது கூடிய தண்ணீரை இழுக்குமெனப் பரிசோதித்துப் பாருங்கள். தற்கால நிலைமைக்கும், தேவைகளுக்கும் ஏற்ற ஒரு புதுமாதிரி இவ்வோடுகள் செருகு விழிம்பும், இரட்டைப் பீலியும் உள்ளனவாய்ச் செய்யப்பட்டு இக்காலத்தில் அதிகமாய் உபயோகிக்கப்படுகின்றன. கீழைத் தேசத்தில் விலைப்படும் ஓடுகளுள் இவைகளே முதன்மை பெற்றன. வாங்கத் தீர்மானிக்குமுன் இவ்வோடுகளை ஒருதரம் பாருங்கள், கவனியுங்கள். மற்றைய ஓடுகளில ஏமாந்து நட்டப்படாதீர்கள்.

வேறு சாதி ஓடுகளைப்போல வழக்கமான தனிப் பீலி ஓடும் இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

வில்லியம் மேதர் அன்சன்ஸ், தனி ஏசன்ட்
1888 ம் ஆண்டு முதல்.

Misc, 2.0—19-3-46—19-9-46) (செ)


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Tuesday April. 9, 1946.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org